### பயணிகளின் வசதிக்காக

# மெட்ரோ ரெயில் நிலையங்களில் வாடகை 'ஸ்கூட்டர்' திட்டம்

## ஓரிரு நாளில் செயல்பாட்டுக்கு வருகிறது

சென்னை, பிப்.19–
பயணிகளின் வசதிக்காக சென்னை மெட்ரோ ரெயில் நிலையங்களில் வாடகை ஸ்கூட்டர் திட்டம் ஓரிரு நாளில் செயல்பாட்டுக்கு வர உள்ளது.

### வாடகை ஸ்கூட்டர் திட்டம்

சென்னை கிண்டி, ஆலந்தூர், வடபழனி, அண்ணாநகர் டவர் ஆகிய மெட்ரோ ரெயில் நிலையங்களில் வாடகை ஸ்கூட்டர் திட்டம் ஓரிரு நாளில் செயல்பாட்டுக்கு வர உள்ளது. இந்த திட்டத்தின் தொடக்க விழா சென்னையில் நேற்று நடந்தது.

விழாவில், மெட்ரோ ரெயில் நிறுவன மேலாளர் (இயக்கம்) கிருபாகரன் கலந்து கொண்டு பேசியதாவது:–

சென்னை மெட்ரோ ரெயில் நிலையங்களில் பயணிகள் வசதிக்காக கால் டாக்சி, ஆட்டோ, ஷேர் ஆட்டோ போன்ற பல்வேறு வசதிகளை மெட்ரோ நிர்வாகம் செய்து உள்ளது. இதன்மூலம் பயணிகள் மிக சுலபமாக தங்களது வீடுகளுக்கும், அலுவலகங்களுக்கும் சென்று வருகின்றனர்.

### விரிவுபடுத்தப்படும்

அதுமட்டுமல்லாமல் இலவச சைக்கிள் திட்டமும் செயல்பாட்டில் உள்ளது. இந்த திட்டம் மெட்ரோ ரெயில் நிலையங்களின் அருகில் உள்ள பகுதிகளுக்கு பயணிகள் சென்று வர வசதியாக உள்ளது. இலவச சைக்கிள் திட்டத்தை பொறுத்தமட்டில் பயணிகள் அட்டை பயன்படுத்தி வரும் பயணிகள் குறிப்பிட்ட தொகையை டெபாசிட்டாக செலுத்தும் பட்சத்தில் இந்த வசதியை பயன்படுத்தி கொள்ள முடியும்.

தற்போது, 'வோகோ' என்ற